**கவனிக்க .-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் கேகாலை நீதிநிர்வாகப் பிரிவின் 2014/2015 ஆம் ஆண்டுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று இதே திகதியில் இதே இவ்வர்த்தமானி இலக்கத்தின்கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1906 - 2015 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2015.03.13

*1906 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 608 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 630 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 631 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## மினுவாங்கொடை நகர சபை

மேல் மாகாண அரசாங்க சேவையின் வெற்றிடங்களை நிரப்புதல்

மேல் மாகாண அரச சேவையின் மினுவாங்கொடை நகர சபையில் தற்பொழுது வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் சேர்த்துக்கொள்வதற்காக குறித்த தகைமைகளைக் கொண்டுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவாளராக உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளக் குறியீட்டு இலக்கம் | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|---|
| 1 | வருமானப் பரிசோதகர்(III) முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத- தொகுதி II சேவை வகுதி | 01 | MN 1/2006A | ரூபா 13,120-10×145-11×170-10×240-10×320-ரூ. 22,040 (4 ஆம் கட்டத்திற்கு எழுவதற்கு முன்னர் தகுதிகாண் தடை தாண்டல் பரீட்சை உண்டு) | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் உட்பட ஏனைய பாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன், ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி யடைந்திருப்பதுடன் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலாவது (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல் வேண்டும். எழுத்துமூலப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும். |
| 2 | வேலைத் தொழிலாளர் வியாபார நிலையத் தொழிலாளர் (அலுவலக சேவகர் சேவை III) | 03 | PL1/2006A | ரூ.11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (04 ஆம் கட்டத்திற்கு எழுவதற்கு முன்னர் தகுதிகாண் தடை தாண்டல் பரீட்சை உண்டு) | குறைந்தபட்சம் 5 ஆம் தரம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 3 | சுகாதாரத் தொழிலாளர் (அலுவலக சேவகர் சேவை III) | 02 | PL1/2006A | ரூ.11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (04 ஆம் கட்டத்திற்கு எழுவதற்கு முன்னர் தகுதிகாண் தடை தாண்டல் பரீட்சை உண்டு) | கல்வித் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. |
| 4 | இயந்திர இயக்குநர் | 01 | PL 2/2006A | ரூ.12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 (04 ஆம் கட்டத்திற்கு எழுவதற்கு முன்னர் தகுதிகாண் தடை தாண்டல் பரீட்சை உண்டு) | **வெளிவாரி விண்ணப்பதாரிகள் :** கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் ஏதாவது இரண்டு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். பதவிக்கு ஏற்ப குறைந்தபட்சம் இரண்டு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் கள் ரோல், பெகோ இயந்திரம் இயக்குவது தொடர்பாக அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ். |

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளக் குறியீட்டு இலக்கம் | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|---|
| | | | | | **உள்ளக விண்ணப்பதாரிகள் :** குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி அடைந்திருத்தல் வேண்டும். <br><br> மற்றும் <br><br> உரிய பதவிக்கு ஏற்ப குறைந்தபட்சம் இரண்டு வருட கால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். (திணைக்களத் தலைவரால்/தாபனத் தலைவரால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் முன்வைக்கப்பட வேண்டும்.) |

**2. பொதுவான தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) நற்குணமுடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன்னதாக மேல் மாகாணத்தின் மினுவாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் குறைந்தபட்சம் 3 வருடங்கள் நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். தற்பொழுது அரச/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருந்தாது.

(5) தண்டனைச் சட்ட கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் தண்டனைக்கு உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

**3. சேர்த்துக்கொள்ளல் மற்றும் சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

(1) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும் ;

(2) விதிக்கப்படும் சதவீதத்தால் விதவை மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்பு நிதி செலுத்தப்பட வேண்டும் ;

(3) சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் 3 வருட பயிற்சிக் காலத்திற்கு உள்ளாக்கப்படுவர் ;

(4) நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் மற்றும் வாய்மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளல் மேற்கொள்ளப்படும்.

**4. சேவையின் நிபந்தனைகள்.-** நியமனம் பெறுபவர்கள் இலங்கைத் தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும், மேல் மாகாண சபையின் நிதிப்பிரமாணங்களுக்கும், மேல் மாகாண சபைச் சட்டப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது மினுவாங்கொடை நகர சபையினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் விதிகளுக்கும், உத்தரவுகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கு சகல அலுவலர்களும் கட்டுப்பட வேண்டும்.

**5. விண்ணப்பங்களை முன்வைத்தல்.-** மேலே காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 2015.04.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் ''செயலாளர், நகர சபை, மினுவாங்கொடை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். மேலும் விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பத்துடன் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(4) அனுபவம் தொடர்பான சான்றிதழ் ;
(5) நற்சான்றுப் பத்திரம் இரண்டு.

இந்த விண்ணப்பங்களைக் கோரும் போது அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது இந்த ஆட்களைச் சேர்த்துக்கொள்ளல் அல்லது இந்த அறிவித்தலை செல்லுபடியற்றதாக்குதல் அல்லது திருத்தம் செய்தல் போன்ற சகல அதிகாரங்களும் மினுவாங்கொடை நகர சபையின் செயலாளரைச் சாரும்.

(திருமதி) எச். ஏ. எஸ். ரத்னலதா,
செயலாளர்,
மினுவாங்கொடை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
மினுவாங்கொடை,
2015, பெப்புருவரி 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையின் மினுவாங்கொடை நகர சபையில்**
**........................ பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் : ஆண்/பெண் :----.
6. பிறந்த திகதி :-
   வருடம் :---- மாதம் :---- திகதி :----.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
8. விவாக நிலை :----.
9. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையா? பதிவு செய்யப்பட்டவரா? என்ற விபரம் :----.
10. கல்வித் தகைமைகள் :- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :----.
11. சாரதி அனுமதிப் பத்திரத்தின் வகை மற்றும் இலக்கம் : (சாரதிப் பதவிக்கு ஏற்புடையதாக அமையும்) :-----.
12. (i) ஏனைய தகைமைகள் :----.
   (ii) தொழில்சார் தகைமைகள் :----.
   (iii) சேவை அனுபவங்கள் :-----.
13. நீங்கள் தற்பொழுது இந்த நகர சபையின் சேவையில் உள்ளவராயின் தற்பொழுது வகிக்கும் பதவி :- (நிரந்தரம்/தற்காலிகம்/ஒப்பந்த/பதில் எனும் நிலை அந்தப் பதவியில் சேர்ந்த திகதி :----.
14. நீங்கள் எப்பொழுதாவது நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என நான் உறுதிப்படுத்துகின்றேன். இந்த சேர்த்துக் கொள்ளல் தொடர்பான நிபந்தனைகளுக்கு இணங்க என்னால் ஏதும் பொய்யான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஒப்புவிக்கப்பட்டால் நியமிப்பதற்கு முன்னர் தகைமையற்றவராகவும், நியமிக்கப்பட்டதின் பின்னர் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-227

## தம்புள்ள மாநகர சபை

தம்புள்ள மாநகர சபையில் தற்போது நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியான, தம்புள்ள மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் வசிப்பவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தவர்கள் கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்தையொத்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து "மாநகர ஆணையாளர், மாநகர சபை, தம்புள்ள" என்ற முகவரிக்கு 2015.03.30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வீதித் தொழிலாளர் | 13 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160- ரூபா 17,600 (06/2006 (iv) இன்படி PL1-2006A) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்களாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் முதல் அமர்வில் ஐந்து பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதாரத் தொழிலாளர் | 08 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160- ரூபா 17,600 (06/2006 (iv) இன்படி PL1-2006A) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்களாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் முதல் அமர்வில் ஐந்து பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

3. **மேலதிக தகைமைகள்**.- குறித்த பதவிகளில் கொண்டுள்ள முன்னனுபவம் விஷேடமாக கவனத்தில் கொள்ளப்படும்.

4. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பதாரரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது தகைமைகள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

5. **சேவைகளுக்கான நிபந்தனைகள்** :

(i) இது நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(ii) மூன்று வருட தகுதிகாண் காலத்தின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தகுதிகாண் காலத்தினுள் பணிக்கு சமுகமளித்தல் மற்றும் நன்னடத்தை போன்றன திருப்திகரமானதாக இருப்பின் தகுதிகாண் காலம் முடிவுறும் போது பணி நிரந்தரமாக்கப்படும்.

6. **வேறு பொதுவான நிபந்தனைகள்** :

(i) விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருத்தமற்றதாகும்).

(ii) விண்ணப்பதாரி வம்சாவழி மூலம் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(iii) சிறந்த குண நலன்களுடன், தெளிவான மனநிலையிலிருத்தல் வேண்டும் ;

(iv) நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவராகவோ, அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது ;

(v) தம்புள்ள மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் 3 வருடங்கள் வதிவதை கிராம அலுவலரினால் வழங்கப்படும், பிரதேச செயலாளர் மூலமும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய A4 கடதாசியில் மட்டும் பூரணப்படுத்தி 2015.03.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மாநகர ஆணையாளர், மாநகர சபை, தம்புள்ள" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.)

8. விண்ணபத்துடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்புவதுடன், நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும்:-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ். (கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) ;

(iv) குணநலச் சான்றிதழ்கள் 02. (ஒன்று கிராம அலுவலரிடமிருந்து பெறப்பட வேண்டும்) ;

(v) தொழில் சம்பந்தமான சான்றிதழ்கள் இருப்பின்;

(vi) முன்னனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரிபவர்கள் மட்டும்)

9. இவ்விண்ணப்பக் கோரலின்போது அல்லது அதன் பின்னர், ஆட்சேர்ப்பை தாமதப்படுத்த அல்லது மாற்றங்களை மேற்கொள்ள அல்லது இரத்துச் செய்ய தம்புள்ள மாநகர சபையின் ஆணையாளருக்கு அதிகாரமுள்ளது. தமிழ் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பின் போது வசனங்களில் அர்த்த வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியையே முதலாகக் கொள்ளப்படும்.

அமில நவரத்ன,
மாநகர ஆணையாளர்,
தம்புள்ள மாநகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் தம்புள்ள மாநகர சபையின்
............... பதவிக்கு ஆட்சேர்ப்பு**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
2. (அ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
   (ஆ) நிரந்தர வதிவிட முகவரி :----.
3. ஆண்/பெண் :----.
4. (அ) பிறந்த திகதி :-
   (ஆ) விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. குடியியல் நிலைமை :----.
7. நீர் இலங்கைப் பிரசையா என்பது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? :----.
8. நீங்கள் எப்போதாவது சந்தேகத்தின் பேரிலோ அல்லது நீதிமன்றின் மூலமோ குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளீரா? ஆம் எனில் விபரம் தருக :----.
9. கல்வித் தகைமைகள் :----.
   (அ) பரீட்சையின் பெயர் :----.
   (ஆ) பரீட்சையின் சுட்டெண் :----.
   (இ) தோற்றிய வருடம் :----.
   (ஈ) தோற்றிய பாடங்கள் :

| | | | |
|---|---|---|---|
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |

10. தொழில் தகைமைகள் மற்றும் முன்னனுபவம் :----.
11. நீங்கள் தற்போது இவ்விடத்தில் தற்காலிகமாக சேவை செய்பவர்களாயின், அச்சேவைக் காலம் மற்றும் தொழிலின் தன்மை பற்றிய விபரங்கள் :- (நிரந்தரம்/தற்காலிகம்/அமைய/ஒப்பந்தம்) :----.

12. வேறு தகைமைகள் :----.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் என் அறிவுக்கெட்டியவரை உண்மையானவையாகும். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் முன்னர் இத்தகவல்களிலேதும் தவறுகள் இருப்பது தெரியவந்தால், இப்பதவிக்கு தகுதியற்றவனாவேனென்றும், இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இத்தகவல்களிலேதும் தவறுகள் இருப்பது தெரியவந்தால், இப்பதவியிலிருந்து எவ்விதக் கொடுப்பனவுகளுமின்றி உடனடியாக நீக்கப்படுவேனென்றும் நன்கு அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-228

---

**இப்பாகமுவ பிரதேச சபை**

இப்பாகமுவ பிரதேச சபையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளையுடைய இப்பாகமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தரமாக குடியிருக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வி /தொழிற் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | மின் தொழில்நுட்ப வியலாளர் | 1 | (அ. நி. சு. 6/2006 IV) PL 3 - 2006 A ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170-ரூ. 18,860 | க. பொ. சா. (சா.தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தது இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் ஒரே அமர்வில் 5 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)<br><br>அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியில் அல்லது தேசிய பயிற்சி நிறுவனத்தில் அல்லது மின் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி சான்றிதழ் (N. V. Q.) 4 ஆம் தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல். |

**2. தேவையான வேறு தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) நல்லொழுக்கமும் தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு வயது 18க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையாளர்களுக்கு மேல் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

(4) தண்டனைச் சட்டக்கோவைப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

(5) தற்போது இப்பாகமுவ பிரதேச சபையில் அமைய/தற்காலிக/ஒப்பந்த/உடன்படிக்கை அடிப்படையில் சபையில் சேவை செய்கின்ற சேவையாளர்களுக்காக முன்னுரிமை வழங்கப்படும்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தம்.-**

(1) எல்லா பதவிகளும் நிரந்தரமானது ஓய்வூதியம் உடையதுமாகும் ;

(2) விதவைகள் அநாதைகள்/விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(3) தேர்ந்தெடுக்கப்படும் சேவையாளர் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்திற்குட்படுவர். தரம் உயர்வுடையதாயின் ஒரு வருட பதில் கடமை காலத்திற்கு உட்படுதல் வேண்டும் ;

(4) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை இப்பாகமுவ பிரதேச சபை, அரச திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபை அல்லது வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற கட்டுப்பாடுகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு விண்ணப்பதாரி உட்படுவார் ;

(5) நியமனம் கிடைத்து மூன்று வருட காலத்தின் பின் பதவியினை உறுதிப்படுத்தல் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல்.-** இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவப்படி 12" × 8" அளவிலான கடதாசியில் விண்ணப்பப்படிவத்தினை அமைத்து 2015.03.27 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், இப்பாகமுவ பிரதேச சபை, இப்பாகமுவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பப்படிவத்தினை இடுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியினை குறிப்பிடப்படல் வேண்டும். உரிய திகதிக்கு பின்பு கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்களும், பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்களையும் நிராகரிக்கப்படும். தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப் படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) தொழில்நுட்ப தேர்ச்சி/திறமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ் தேர்ச்சி மற்றும் தேர்ச்சியற்ற பதவிக்காக ;
(4) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி ;
(5) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(6) மின் தொழில் நுட்பவியலாளராக 3 வருட கால அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
(7) அண்மையில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ் இரண்டு.

**ஆட்சேர்ப்பு முறை.-**

(1) உரிய தகைமைகளை வழங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கிடையில் தொழில் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில் நுட்பத்தினை உறுதிப்படுத்தும் பரிசீலனையின் பெறுபேறின்படி சேர்த்துக்கொள்ளப்படுவர்;

(2) இந்த விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது ஆட்சேர்ப்பை காலந்தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இரத்து செய்யும் அதிகாரம் இப்பாகமுவ பிரதேச சபை செயலாளருக்குரியதாகும்.

ஆர். எம். ரி. கே. ரத்னாயக்க,
செயலாளர்,
இப்பாகமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
இப்பாகமுவ,
2015, பெப்புருவரி 16 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

***இப்பாகமுவ பிரதேச சபையில் ................................ பதவி***

1. (i) விண்ணப்பத்தாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்துக்களுக்கான பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. பிறந்த திகதி :-
வருடம் :---- மாதம் :---- திகதி :----.
(அ) 2015.03.27 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
4. பிரதேச செயலாளர் பிரிவு :----.
5. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? இல்லையாயின் பதிவு செய்யப்பட்டதினாலா என்பது பற்றி :----.
6. ஆண்/பெண் தன்மை :----.
7. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
8. சித்தியடைந்துள்ள உயர் பரீட்சை :----.
9. தொழில்நுட்ப தேர்ச்சி :----.
10. தொழிற் தகைமை :----.
11. உங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதா? :----.

12. அவ்வாறாயின் தண்டனையின் தன்மை :----.

13. தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அது பற்றிய விபரம் :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து விலக்குவதற்கு ஆளாவேன் என்றும் எனக்குத் தெரியும்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-324

---

## அம்பாந்தோட்டை மாநகர சபை

### தென் மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிறுவன மயப்படுத்தப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

அம்பாந்தோட்டை மாநகர சபையில் வெற்றிடங்களாகியுள்ள கீழ்வரும் பதவிகளுக்கான தகைமைகளைப் பெற்ற அம்பாந்தோட்டை மாநகர சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடமாகக் கொண்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தென் மாகாண அரச சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிறுவன மயப்படுத்தப்பட்ட மோட்டார் வாகன சாரதி சேவை III ஆம் வகுப்பு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | சாரதி | III ஆரம்ப தரத்தினர் | 2 | PL 3-2006ஏ<br>ரூ. 12,470-<br>10×130-<br>10×145-<br>10×160-<br>12×170-<br>ரூ. 18,860 | க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |

**வேறு தகைமைகள்.-** வெற்றிடங்களாக காணப்படும் மோட்டார் வாகன வகைகளின் சாரதி பதவிகளின் வகைகளின் கீழ், வாகனங்களை செலுத்துவதில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரமும், நிபுணத்துவம் பற்றிய சான்றிதழையும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மோட்டார் வாகனச் சாரதிகள், சாரதி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டதன் பின்னர் குறைந்தபட்சம் 03 வருட அனுபம் பெற்றிருத்தல் அவசியம். (அனுபவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

(1) **ஆட்சேரப்பு முறை.-**

(i) அரச வர்த்தமானியில் பகிரங்க விளம்பரப்படுத்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, உரிய முறைமையிலமைந்த நேர்முகப் பரீட்சை, தொழில் பயிற்சி வாயிலாகப் பெற்றுக்கொண்ட தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) இந்தச் சேவைத் துறைக்கான அனைத்து நியமனங்கள்/ஆட்சேர்ப்புகள் தென்மாகாண அரச சேவை உள்ளூராட்சிமன்ற திணைக்களத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட மோட்டார் வாகன சாரதிகளுக்கான சாரதிகள் சேவை சட்டப் பிரமாண விதிமுறைகளுக்கு கட்டாயம் இணக்கப்பாடான முறையில் மாத்திரம் அமைந்திருத்தல் வேண்டும்.

(iii) குறிப்பிட்ட தகைமைகளை நிறைவு செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனத்திற் கொள்ளப்படவேண்டியது**.- தற்போது அம்பாந்தோட்டை மாநகர சபையில் உதவியாளர்/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிக முன்னுரிமைகள் வழங்கப்படும். (இது பற்றி நன்னடத்தை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(2) **ஆட்சேர்ப்பிற்கான பொது நிபந்தனைகள்** :

(i) விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னருள்ள 3 வருடங்களுக்குள் அம்பாந்தோட்டை மாநகரசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் இடாப்பினால் அல்லது பிரதேச செயலாளர் மூலம் வழங்கப்படும் சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.) ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு மேற்படாத வயதை உடையவராக இருத்தல் வேண்டும். (அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள நிரந்தர ஊழியர்களுக்கு மேல் வயதெல்லை செல்லுபடியற்றது);
(iv) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை வழங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் ;
(v) நன்னடத்தையும், சிறந்த மனோ நிலையையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள், அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், அந்தப்பரிசோதனையில் உடல் ரீதியாக அவர் தகுதி காணப்படாதவிடத்து நியமனம் இரத்துச் செய்யப்படும் ;
(vi) விண்ணப்பதாரி, மேற்படி பதவிக்கு தேவையான தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

(3) **சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது ஓய்வூதியம் உள்ளடங்கலானது. சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்குதாரராகி, பணம் செலுத்தல் வேண்டும் ;
(ii) நிரந்தர நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்தின் பின்பே செயற்படுத்தப்படும் ;
(iii) நான்காவது சம்பள அளவுத்திட்டத்திற்கு பிரவேசிப்பதற்கு முன்னர், 1 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும். உடன் நியமனம் பெற்று 5 வருடங்களுக்குள் இரண்டாவது மொழித்தேர்ச்சி அடைவதைப் பெற்றிருத்தல் வேண்டும்;
(iv) இதற்கு மேலதிகமாக தாபனக் கோவை விதிமுறைகளுக்கும். தென் மாகாண சபை மூலம் காலாகாலத்திற்கு இடப்படும் கட்டளைகளுக்கும் தென்மாகாண சபை ஆளுநரின் சிபாரிசுகளுக்கும்,தென் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலா காலத்திற்கு இடப்படும் கட்டளைகளுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி நிறுவன தலைவர்களின் கட்டளைகளுக்கும் ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அனைத்து ஊழியர்களும் கடப்பாடுடையவர்களாவர்.

(2) **வேலைக்கள தொழிலாளர் III ஆம் வகுப்பு**.-

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | தரம் | வெற்றிடங்கள் தொகை | சம்பளத்திட்டம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | வேலைக்கள தொழிலாளர் III ஆம் வகுப்பு | III ஆம் வகுப்பு ஆரம்பக் கற்கை | 05 | பீஎல் 1-2006ஏ ரூ. 11,730- 10×120- 10×130- 10×145- 12×160- ரூ. 17,600 | 9 ஆம் அல்லது 8 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

(1) **ஆட்சேரப்பு முறை**.-

(i) நேர்முகப்பரீட்சை மூலமே தகுதி பெற்றோர்கள் தெரிவு செய்யப்படுவர்;
(ii) உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பவர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனத்திற் கொள்ளப்படவேண்டியது**.- தற்போது அம்பாந்தோட்டை மாநகர சபையில் உதவியாளர்/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிக முன்னுரிமைகள் வழங்கப்படும். (இது பற்றி நன்னடத்தை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

***(2) ஆட்சேர்ப்பு முறைக்கான பொது நிபந்தனைகள் :***

(i) *விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு மேற்படாத வயதை உடையவராக இருத்தல் வேண்டும்;*

(ii) *விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;*

(iii) *நன்னடத்தையும், சிறந்த மனோ நிலையையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்;*

(iv) *குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை வழங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் ;*

(v) *அம்பாந்தோட்டை மாநகர சபை எல்லைக்குள் குறைந்தது 3 வருட நிரந்தர வதிவிடத்தவராக இருத்தல் வேண்டும். (அவ்வாறு நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பதாரிகள் தேவையான அளவு இல்லாத சந்தர்ப்பத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்குள் அமைந்துள்ள அண்மித்த உள்ளூராட்சி நிறுவன அதிகார எல்லைக்குட்பட்ட விண்ணப்பதாரிகள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.).*

***(3) சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் :***

(i) *இலக்கம் 1, 2 ஆகிய அனைத்து பதவிகளும் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்தல் வேண்டும் ;*

(ii) *நிரந்தர நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்தின் பின்பே செயற்படுத்தப்படும் ;*

(iii) *மூன்றாவது சம்பள அளவுத்திட்டத்திற்கு பிரவேசிப்பதற்கு முன்னர், 1 ஆம் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும். உடன் நியமனம் பெற்று 5 வருடங்களுக்குள் இரண்டாவது மொழித்தேர்ச்சி அடைவைப் பெற்றிருத்தல் வேண்டும்;*

(iv) *இதற்கு மேலதிகமாக தாபனக் கோவை விதிமுறைகளுக்கும் தென் மாகாண சபை மூலம் காலாகாலத்திற்கு இடப்படும் கட்டளைகளுக்கும் தென்மாகாண சபை ஆளுநரின் சிபாரிசுகளுக்கும், தென் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலா காலத்திற்கு இடப்படும் கட்டளைகளுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி நிறுவன தலைவர்களின் கட்டளைகளுக்கும் ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அனைத்து ஊழியர்களும் கடப்பாடுடையவர்களாவர்.*

***விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை.-*** *மேற்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயார் செய்து 2015.04.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில், ''மாநகர சபை ஆணையாளர், அம்பாந்தோட்டை மாநகர சபை, அம்பாந்தோட்டை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் இருக்கின்ற விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தங்களது நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஏ4 அளவு தாளில் தயார் செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) பூரணப்படுத்தப்படாத, தெளிவற்ற, குறிப்பிட்ட தினத்தில் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் அனைத்தும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.*

*விண்ணப்பப்படிவத்துடன் கீழ்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :*

(அ) *பிறப்புச் சான்றிதழ் ;*
(ஆ) *பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் ;*
(இ) *கல்வித் தகைமைகள் ;*
(ஈ) *வதிவிட உறுதிச் சான்றிதழ் (பிரதேச செயலாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்) ;*
(உ) *அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரது சான்றிதழ் ;*
(ஊ) *அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;*
(எ) *வேறு தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;*
(ஏ) *சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;*
(ஐ) *சாரதி சம்பந்தமாக, மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்கான அனுமதிச்சீட்டின் பிரதியொன்று.*

*மாநகர ஆணையாளர்,*
*அம்பாந்தோட்டை மாநகர சபை,*
*அம்பாந்தோட்டை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*அம்பாந்தோட்டை*
*2015, பெப்புருவரி 25.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

***தென் மாகாண அரச சேவையில் - அம்பாந்தோட்டை மாநகர சபையில் ................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்***

(1) (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்:----.

(2) நிரந்தர முகவரி :----.

(3) (அ) நிரந்தர வதிவிட மாவட்டம்:----.
(ஆ) நிரந்தர வதிவிட பிரதேச செயலாளர் பிரிவு :----.

(4) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

(5) (அ) பிறந்த திகதி :-
ஆண்டு:----. மாதம்:----. திகதி:----.
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு வயது :-
வருடங்கள்:----. மாதங்கள் :----. நாட்கள்:----.

(6) தொலைபேசி இலக்கம் :----.
(அ) கையடக்க :----.
(ஆ) வதிவிட :----.

(7) ஆண்/பெண்:----.

(8) விவாகமானவர்/விவாகமாகாதவர் :----.

(9) (அ) கல்வித் தகைமைகள் :- க. பொ. த. (சா/த.) பரீட்சை பரீட்சை சுட்டெண் :-----.
வருடம் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

(ஆ) பெற்றுக்கொண்டுள்ள உயர் கல்வித்தகைமை பற்றிய விபரம் :----.

(10) (அ) வேறு கல்வித் தகைமைகள் :----.
(ஆ) தொழில்ரீதியான தகைமைகள் :----.
(இ) சேவை அனுபவம் :----.

(11) சாரதி சேவைக்கு
(அ) சாரதி அனுமதிப் பத்திர வகை :----.
(ஆ) சாரதி அனுமதிப் பத்திர இலக்கம் :----.
(இ) சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட திகதி :----.

(12) நீர் தற்போதைக்கு இந்த மாநகர சபையில் சேவையில் இருப்பதாயின்-
(அ) தற்போதைக்கு வகிக்கும் பதவி :----.
(ஆ) நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையிலான என்பது பற்றி :----.
(இ) இந்தப் பதவிக்கு நியமன்பெற்ற திகதி :-----.

(13) நீர் தண்டனை பெறக்கூடிய குற்றமிழைத்தல் ஒன்றின் பேரில் நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீப்பளிக்கப்பட்டவரா?
அப்படியாயின் அது பற்றிய விபரம் :----.

14. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உரிய விதத்தில் உண்மையானதும், சரியானவை எனவும் அறிவிக்கின்றேன். இங்கு என்னால் வழங்கப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவையென அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவனாவேன் எனவும். தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எந்த வித நஷ்டஈட்டுத் தொகையுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:----.

**தற்போதைக்கு அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி .................................................................................. என்பவர் தற்போது இந்தத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ........................................................... ஆக பணி புரிகின்றார். மேற்படி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் அவரை ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு (அறிவுறுத்தப்படுதல் மாத்திரம் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தினை சிபாரிசு செய்கின்றேன்.

-------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிநிலைப் பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் (உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :-----.

3-327

---

**தொம்பே பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

தொம்பே பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தினுள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடமாகவுள்ள பதவி வகைகளும் அவை பற்றிய தகவல்களும் கீழ்வருமாறு :

| தொடர் இலக்கம் | பதவி | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வெளிக்களத் தொழிலாளர் (வீதி) (அலுவலக ஊழியர் சேவை தரம் III) | 06 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160 – ரூ. 17,600 (PLI - 2006 A) 4ஆவது சம்பள உயர்ச்சிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு | குறைந்தபட்சம் 5 ஆம் தர/6 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |
| 2 | சுகாதார (அலுவலக ஊழியர் சேவை தரம் III) | 02 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160 – ரூ. 17,600 (PLI - 2006 A) 4ஆவது சம்பள உயர்ச்சிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு | கல்வித் தகைமைகள் அவசியமற்றது. |

**2. சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

(1) இலங்கையராயிருத்தல் ;

(2) நன்னடத்தையும் சிறந்த தேக ஆரோக்கியமுடையவராயிருத்தல் ;

(3) விண்ணப்பம் கோரப்படும் தினத்தன்று 03 ஆண்டுகள் மேல்மாகாணத்தினுள் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல் ;

(4) விண்ணப்பப்பத்திரம் முடிவு தினத்தன்று 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் ; தற்போது சேவையிலுள்ள ஊழியர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது ;

(5) மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பதவிக்கும் உரியவாறு தென் எதிரே கேட்கப்பட்டுள்ள குறைந்த தகைமை பூர்த்தியாகியிருத்தல்;

(6) சேர்த்துக்கொள்ளப்படும் ஒழுங்கு முறைக்கு ஏற்ற முறையான நேர்முகப் பரீட்சைக்கும் செயன்முறைப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவதோடு அதன் போது பெறப்படும் கூடிய புள்ளிகளின் அடிப்படையில் தகுதியானவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(7) விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பம் கோரப்படும் போது அல்லது சேர்த்துக்கொள்ளப்படுவதைத் தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் அல்லது இவ்வறிவித்தலை திருத்தியமைத்தல் அல்லது இரத்து செய்யும் உரிமை தொம்பே பிரதேச சபைச் செயலாளருக்கு உரித்தாகும்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(1) பதவிகள் யாவும் நிரந்தரமானவை. ஓய்வூதியத்துக்குரித்துடையது ;

(2) உரியவாறு விதவைகள்/அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் ;

(3) சேர்த்துக்கொள்ளப்படுபவர் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உட்படுவார் ;

(4) அரச மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்காகவும் விசேடமாக அரச மொழிகள் சட்டத்தின் விதிகளை அமுலாக்குவதற்கும் தற்போதைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதும் இதன் பின்னர் ஏற்படுத்தப்படும் நியதிகளுக்கு ஏற்பவும் செயற்படுத்தப்படல் வேண்டும்.

இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் மேலதிகமாக தாபனக் கோவை விதிகளுக்கும் மேல்மாகாண சபையின் நிதிக் கட்டளைகளுக்கும் திணைக்களக் கட்டளைகளுக்கும் மேல்மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது தொம்பே பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் நியதிகளுக்கும் அமைவாக செயற்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**4. விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய முறை.-** இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் ஏ4 அளவு தாளின் (1 முதல் 10 ஆம் இலக்கம் வரை ஒரு பக்கத்திலும், 11 முதல் 14 ஆம் இலக்கம் வரை மறுப்பக்கத்திலும்) அமையுமாறு தாளின் இரு பக்கங்களிலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2015.04.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு செயலாளர் தொம்பே பிரதேச சபை கிரிந்திவெல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிழையான முகவரி எழுதுவதால் திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக பொறுப்பு கூறப்பட மாட்டாது என்பதோடு உரிய திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பமும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு மாறான விண்ணப்பமும் பூரணமற்ற விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) தேசிய அடையாள அட்டை ;

(3) கல்விச் சான்றிதழ் அல்லது உயர் கல்வித் தகைமைக்கான வேறு சான்றிதழ்கள் ;

(4) பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிடம் பற்றிய வதிவிட சான்றிதழ் ;

(5) சேவைத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(6) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

எம். யூ. ஆர். மத்துமகே,
செயலாளர்,
தொம்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தொம்பே,
2015, பெப்புருவரி 25.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண அரச சேவையில் தொம்பே பிரதேச சபையில் .................................... பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பம்**

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
   கிராம உத்தியோகத்தர் பிரிவு :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பிறந்த திகதி :- ஆண்டு :-----. மாதம் :-----, திகதி :-----.
6. பால் : (ஆண்/பெண்) :----.
7. விவாக நிலை : விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.
8. விண்ணப்ப இறுதித் திகதியன்று வயது :
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----, நாட்கள் :-----.
9. மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிட காலம் :-----.
10. இலங்கை பிரசையெனின் பிறப்பின்/பதிவின் மூலம் என்ற விவரம் :----.
11. கல்வித்தகைமை (சித்தியெய்திய பரீட்சை பற்றிய விவரம்) :----.
   (அ) சித்தி பெற்ற ஆண்டு வருடம் :----.
   க. பொ. த. (சா.த.) பரீட்சை
   (ஆ) சுட்டிலக்கம் : வருடம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சை

சுட்டிலக்கம் : வருடம் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

12. தொழிற் தகைமை :----.
13. சேவை அனுபவம் :----.
14. நீர் எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக இருக்கின்றீரா? :----.

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும் பிழையற்றதென்றும் உறுதி கூறுகின்றேன். இந்த சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகளின்படி என்னால் பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்பட்டால் நியமனத்துக்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதற்கும் நியமனத்தின் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : -----.

3-367

## கல்கமுவ பிரதேச சபை

ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெற்ற III ஆம் தரத்தில் சாரதிப் பதவிக்காக ஆட்சேர்ப்பு

வடமேல் மாகாண அரச சேவையின் கல்கமுவ பிரதேச சபையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பிற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

கல்கமுவ பிரதேச சபையில் தற்போது சேவையில் உள்ள நிரந்தர, அமய, தற்காலிக, தொண்டர் அடிப்படையிலான ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | சாரதி | 1 | (அ.நி.சு 06/2006 IV) PL - 3-2006A ரூ. 12,470-10×130-10×145-10×160- 12×170-ரூ. 18,860. | 1. க. பொ.த. (சா. தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆகக்குறைந்தது இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)<br>2. தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.<br>3. பொதியில்லாத எடை அந்தர் 34 இற்கு அதிக மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக்கூடிய பஸ்வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |

**2. தேவையான வேறு தகைமைகள்:**

(1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித்திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம அலுவலரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

(3) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

(4) நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(5) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

**3. ஆட்சேர்க்கும் முறை.-**

(1) சேவை தேவைக்கேற்ப முறையான நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறையிலான பரிசீலனை மூலம் தகைமையுடையோரை தேர்ந்தெடுக்கப்படுவர்;

(2) தற்போது இந்த பிரதேச சபையில் நிரந்தர/தற்காலிக/அமய/கொடுப்பனவு/தொண்டர் அடிப்படையில் சேவை புரியும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) உரிய தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்படும்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தம்** :

(1) எல்லாப் பதவிகளும் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும் ;

(2) விதவைகள், அநாதைகள் /விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(3) தேர்ந்தெடுக்கப்படும் சேவையாளர் 3 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டது. தரம் உயர்வுடையதாயின் ஒரு வருடத்திற்கு பதில் அடிப்படையில் சேவை செய்தல் வேண்டும் ;

(4) அரச மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காகவும், விசேடமாக அரச கரும மொழிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காகவும், தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதும் இதன் பின் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கு உடன்படல் வேண்டும்.

(5) இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக கௌரவ வடமேல் ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டுள்ள சேவை நியதிச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கும், நிதிச் சட்டத்திட்டங்களுக்கும் அரச திணைக்கள கோட்பாடுகளுக்கும் வடமேல் மாகாண சபையினால் அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதலுக்கு விண்ணப்பதாரி உடன்படல் வேண்டும்.

5. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல்**.-

(1) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து விண்ணப்பப்படிவத்தினை 2015.04.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு "செயலாளர், கல்கமுவ பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவத்தினை இடுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் பதவியினை குறிப்பிட்டு விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்;
(2) கல்விச் சான்றதழ்;
(3) வதிவு பற்றிய கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ் இரண்டு. (ஒன்று கிராம அலுவலரிடத்தில் பெற்றுக்கொண்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்) ;
(5) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ் (அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ள சேவையாளர்கள் தமது விண்ணப்பப் படிவத்தினை திணைக்கள/நிறுவக தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்)

ஏ. பீ. நிமல் ரத்னாயக,
செயலாளர்,
கல்கமுவ பிரதேச சபை.

கல்கமுவ பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ,
2015, மாச்சு 20.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண அரச சேவையில் கல்கமுவ பிரதேச சபையில் ..................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுக்கான பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. (i) பிறந்த திகதி :- வருடம் :-----, மாதம் :----, திகதி :----.
(ii) 2015.04.10 திகதிக்கு வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் தன்மை :----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
7. இனம் :----.
8. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவு காலம் :----.

9. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? இல்லையாயின் பதிவு செய்யப்பட்டதனாலா என்பது பற்றி ? :----.

10. கல்வித் தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-

(i) சித்தியெய்திய வருடம் /தரம் :-----. வருடம் :-----.

(ii) க. பொ. த. (சா/த.) பரீட்சை :

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க. பொ. த. (உ/த.) பரீட்சை

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. தொழில் தகைமை மற்றும் அனுபவம் :----.

12. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அந்த சேவை காலம் மற்றும் விபரம் :----.

13. நீங்கள் எப்போதாவது அல்லது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

14. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்று நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு ஆளாவேன் என்றும் எனக்குத் தெரியும்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
